# அம்பாந்தோட்டை மாநகர சபை
# அம்பாந்தோட்டை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 21 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3.1 மற்றும் 1.3.5 ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பாந்தோட்டை மாநகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 944,204 தொகை கூடுதலாகவும், மூலதன மானியங்கள் மற்றும் நிர்மாண கடன்பட்டோர் என கணக்குகளில் மீதி 472,102 வீதம் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 5 வருமானக் கணக்குகளில் ஆரம்ப பற்றாக்குறை மற்றும் ஆரம்ப நிலுவையிலிருந்து மீளாய்வாண்டில் கிடைத்த பணம் சரியாக கணக்கீடு செய்யப்படாமையால் ஆண்டின் இறுதியில் வருமானக் கடன்பட்டோர் மீதி மற்றும் ஆண்டின் வருமானம் ரூபா 1,549,026 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்படாத நிர்மான வேலையொன்றிற்காக ரூபா 1,116,021 ஆன கடன்கொடுத்தோர் நிதிஏற்பாட்டை உருவாக்கியதால் ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் மீதி சமமான பெறுமதியில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி நிதி ஏற்பாட்டின் கீழ் 06 நிர்மாண வேலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 665,302 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) அம்பாந்தோட்டை பிரதேச சபையிலிருந்து மாநகர சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 203,209 தொகையான சொத்துக்கள் மற்றும் ரூபா 4,262,501 தொகையான 03 பொறுப்பு மீதிகள் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 06 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய புத்தகங்கள் மற்றும் பட்டோலைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 513,977 ஆன சமனின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 222,130 தொகையான கலி பௌசர் வருமானம், ரூபா 10,000 தொகையான பஸ் வண்டி வருமானம் மற்றும் ரூபா 36,750 தொகையான பெக்கோ இயந்திர வருமானம் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாக வழங்கப்பட்ட இயந்திர பொறிகளுக்காக சபையால் செலுத்த வேண்டியிருந்த ரூபா 895,136 தொகையான கடன் பணத்தில் 11 அரையாண்டு தவணைக் கொடுப்பனவுகள் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் செயலற்று காணப்பட்டது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 101,660 தொகையான விளையாட்டு உபகரணங்கள் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு அறிக்கை, பயன்பாட்டு அட்டவணைகள் மற்றும் பட்டோலைகள், ரூபா 1,439,414 கூட்டுத்தொகையான நிலுவையாக இருந்த மின் கட்டணங்கள் மற்றும் அரசின் மூலதன மானியங்கள் தொடர்பாக பயன்பாட்டு அட்டவணைகள் மற்றும் பட்டோலைகளும், காலப்பகுப்பாய்வும் ரூபா 108,855 தொகையான அபிவிருத்தி ஒதுக்கீடு தொடர்பாக காலப்பகுப்பாய்வும் பயன்பாட்டு அட்டவணைகள் மற்றும் பட்டோலைகளும், உரிய தகவல்களும் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | காலாவதியான ரூபா 2,843,382 ஆன 18 வைப்பு மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவு | தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு இணங்காமல் சபையால் 15 ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 2015 செப்தெம்பர் முதல் 2016 பெப்ரவரி வரை காலப்பகுதிக்காக ரூபா 1,589,297 கூட்டுத்தொகையான சம்பளம் மற்றும் படிகள் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,118,444 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,071,810 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,953,366 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சுய வருமானமீட்டலை விஞ்சிய மீண்டெழும் செலவினம், 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 49 சதவீதத்தினாலும் 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 133 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஆ) சபைக்கு கிடைக்கப்பெறும் வருமான மானியம் கிடைக்கப்பெறாதிருந்தால் சபை வருமானங்களிலிருந்து மீண்டெழும் செலவினத்தை எந்தவொரு முறையிலும் மேவுகை செய்ய முடியாதிருப்பதால், மீண்டெழும் செலவினம் தொடர்ச்சியாக அதிகரிக்கும் வேகத்தில் அதிகரித்திருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரித்தாக பட்டியலிடப்பட்டிருந்த ரூபா 30.3 மில்லியனான மொத்த மீண்டெழும் வருமானத்தில் ரூபா 24.8 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமான சேகரித்தலின் முன்னேற்றம் 82 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 9.1 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 4.6 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிலுவை வருமான அறவீட்டின் முன்னேற்றம் 50 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

#### 2.3.2 வீத வரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 3,292,501 தொகையான நிலுவை வீத வரியை அறவிடுவதற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 யூன் 30 ஆந் திகதி அளவில் இந்நிலுவை ரூபா 1,637,834 வரை குறைத்துக் கொண்டுள்ளதாக மாநகர ஆணையாளரால் 2016 யூலை 28 ஆந் திகதி எனக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

**2.3.3 வாடகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்குரிய நிலுவைக் கடை வாடகை ரூபா 2,877,739 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அந்நிலுவை ரூபா 3,416,822 வரை அதிகரித்திருந்த போதிலும், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 253(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடன்படிக்கைகளை நாளதுவரையாக்காமை மற்றும் உப குத்தகைக்கு வழங்கல்

(i) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 மற்றும் 06 ஆவது பந்திகளின் பிரகாரம் திஸ்ஸ வீதி 10 ஆம் இலக்க கடையின் உடன்படிக்கையை நாளதுவரையாக்குவதற்கும் மதிப்பிடப்பட்ட வரித்தொகையை திருத்தம் செய்வதற்கும் 2016 பெப்ரவரி 26 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்குறித்த சுற்றறிக்கையின் 12(I), (II) மற்றும் (III) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்காமல் குத்தகையாளரால் அக்கடை வெளித்தரப்பினருக்கு நீண்டகாலமாக உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

**(இ) ருஹுனு பிளாசா கட்டிடத்தின் இரண்டாவது மாடியை வாடகைக்கு வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007 ஆகஸ்ட் 01 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த 2012 யூலை 31 ஆந் திகதி இரத்தாகியிருந்த போதிலும், திறந்த கேள்வி நடைமுறை பின்பற்றப்படாமல் சபை தீர்மானமொன்றின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டிலிருந்து இம்மாடி நவீனமயப்படுத்தப்பட்டு சிற்றுண்டிச்சாலை ஒன்றை நடாத்திச் செல்வதற்காக கட்டிடத்தின் முதலாவது மாடியை குத்தகைக்கு எடுத்த குத்தகையாளருக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 பெப்ரவரி 26 ஆந் திகதி வரை குத்தகையாளருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் ஒரே தடவை பணமோ அல்லது பாதுகாப்பு வைப்பொன்றோ பெற்றுக்கொள்ளாமல் சபையின் மேற்பார்வையொன்றில்லாமல் சபைக்குரிய ஆதனமொன்று நவீனமயப்படுத்தல் வேலைக்காக குத்தகையாளருக்கு இடமளிக்கப்பட்டிருந்தன.

**2.3.4 முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,775,774 முத்திரைக் கட்டணமாக கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

2015 ஆம் ஆண்டில் மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 999,115 தொகையான கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலைய கட்டிடத்தின் திருத்த வேலைகள் மற்றும் நிலத்தை அமைக்கும் செயற்திட்டத்தின் மதிப்பீட்டை அங்கீகரிப்பதில் தாமதம் காரணமாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்க முடியாதிருந்தது.

### 3.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2015 மே 21 ஆந் திகதிய 15/நானாவித (051) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 188 ஆம் பிரிவிற்கு இணங்காமல் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் விளையாட்டு விழாவிற்காக மாநகரசபை நிதியத்திலிருந்து ரூபா 197,048 செலவிடப்பட்டிருந்தது

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) துறைமுக கிராமத்திற்கு அருகில் சனசமூக மண்டபக் கட்டிடத்தைச் சுற்றி பிரிஸ்டரை தயாரித்தல், கட்டிடத்தின் உள்ளே வர்ணம் பூசுதல், உள்ளே நிலத்தை அமைத்து சீமெந்து பூசுதல் போன்ற செயற்பாடுகள் மற்றும் கெயார் கிராமத்திற்கு அருகில் சனசமூக மண்டபக் கட்டிடத்தைச் சுற்றி பிரிஸ்டரை தயாரித்தல், கதவு யன்னல்களை பொருத்துதல், உள்ளே நிலத்தை அமைத்து சீமெந்து பூசுதல் போன்ற செயற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட விதந்துரைப்புகளின் பிரகாரம் முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கெயார் கிராமத்திற்கு அருகில் சனசமூக மண்டபக் கட்டிடம் தொடர்பாக 2016 பெப்ரவரி 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது சுவர்களின் தடிப்பு 7 அங்குலமாக இருந்த போதிலும், 9 அங்குலம் என கொடுப்பனவு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டு காண்பிக்கப்பட்டமையால் ரூபா 37,043 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் மாநகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 21 வெற்றிடங்களும் 09 ஊழியர்கள் மிகையாக இருந்த போதிலும், வெற்றிடங்களை நிரப்புவதற்கோ மிகையான பதவிகளை முறைமைப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 02 செலவின விடயங்களில் ரூபா 38,325,435 சேமிப்புக்களும் 02 வருமான விடயங்களில் ரூபா 45,383,537 ஆன அடையப் பெறாத வருமானமும் சுயமான உழைப்பு வருமானங்களில் 30 சதவீதம் மூலதனச் செலவினத்திற்காக ஒதுக்கப்படாதிருந்தமை போன்ற காரணங்களினால் பாதீடானது

ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.சு.லே. ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், உள்ளகக் கணக்காய்வு திட்டத்திற்காக கணக்காய்வு தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 யூன் 09 ஆந் திகதி DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் தீர்வு செய்யப்படாத மொத்தப் பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 7,584,540 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 229,477 தொகை முன்னைய ஆண்டுகளுக்குரித்தாக இருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்